செ.வெ.எண்: 902

13/10/2010

.இயக்குநர், செ.ம.தொ (ம)
அலுவலால், அ.து.செ..
வெ..அ.நி. (ம) செய்தித்துறை
13 OCT 2010
1163
செயலகம் சென்னை-9

**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்,**
**சேப்பாக்கம், சென்னை-5**

நாள் : 12.10.2010

**பத்திரிக்கைச் செய்தி**

11-10-2010 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தனியார் மகளிர் கல்லூரி விடுதி, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் அவர்களால் பிற்பகல் 5.00மணியளவில் பார்வையிடப்பட்டது. பார்வையின் போது அவ்விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவிகளிடம் விடுதியின் குறைபாடுகள் பற்றி கேட்டறியப்பட்டது. மாணவிகள் ஒரு அறையில் 6 மாணவிகள் இருப்பதாகவும், இடவசதி போதவில்லை என்றும் சுற்றுசுவர் அமைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள் பார்வையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை சரி செய்வது குறித்து அக்கல்லூரி நிர்வாகத்திற்கு மகளிர் ஆணையம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டு, விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டனவா என்பதை சரிபார்க்க மீண்டும் ஒரு முறை அக்கல்லூரி மற்றும் விடுதியினை பார்வையிட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது போன்று அரசு, தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மகளிர்கள் தங்களது கல்வி நிலையங்கள் மற்றும் விடுதிகளில் மகளிருக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் குறைபாடுகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிருக்கு தங்களது அலுவலகங்களில் மகளிருக்கான உரிமைகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறைபாடுகள் குறித்து இவ்வாணையத்திற்கு புகார் அனுப்பினால், மகளிர் ஆணையத்தால் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என்றும் புகார்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி பாதுகாக்கப்படும் என்றும் மகளிர் ஆணையம் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறது.

எஸ்பி. சற்குணம் 12/10/2010

தலைவர்,
தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்,
சேப்பாக்கம், சென்னை-5

12/10/10

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9